நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை 5.

சுற்றறிக்கை

ந.க.எண்.80274/94/கே3 நாள்:1.9.95.

பொருள்: தற்காலிக பணி நீக்கம் - ஏற்கனவே முடிவுற்ற தற்காலிக பணிநீக்க காலத்திற்கு அனுமதி/பின்னேற்பு வழங்கக் கோருதல் குறித்த தெளிவுரைகள் வழங்குதல் குறித்து.

பார்வை: அரசு கடிதம் எண்.31787/நப2/94-2ன் நாள் 30.8.94.

---

பார்வையில் சுட்டியுள்ள அரசு கடிதத்தின் நகலை இத்துடன் தங்களுக்கு அனுப்பி வைத்துள்ளேன். அதில் தற்காலிகப்பணி நீக்க காலத்திற்கு அனுமதி/பின்னேற்பு வழங்க கோருதல் குறித்த தெளிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே மேற்படி அரசு கடிதத்தில் தெரிவித்துள்ள தெளிவுரைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து நகராட்சி ஆணையர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இச்சுற்றறிக்கை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் கடிதம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம். ச. ஜெயராமன்,
ந.நி.ஆணையருக்காக.

இணைப்பு: அரசு கடித நகல்:

பெறுநர்: அனைத்து நகராட்சி ஆணையர்கள் மற்றும்
அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்.

நகல்: இருப்புக்கோப்பு (கே3)
உதிரி: 1.

/உத்திரவுப்படி அனுப்பப்படுகிறது/

கண்காணிப்பாளர். 6/9/95

---

இணைப்பு:

நகல்: முந்தனம்.

அரசு துணைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை சென்னை 9 அவர்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை 5, அவர்களுக்கு அனுப்பியுள்ள 30.8.94 நாளிட்ட கடித எண்.31787/நப2/94-2ன் உண்மை நகல்.

---

பொருள்: பணியமைப்பு - திருமங்கலம் நகராட்சி - திரு.கே.முருகேசன், வருவாய் உதவியாளர் - வரிவசூல் தொகையினை கையாடல் செய்ததற்காக தற்காலிக பணி நீக்கம் - ஏற்கனவே முடிவுற்ற தற்காலிகப் பணிநீக்க காலத்திற்கு அனுமதி/பின்னேற்பு வழங்கக் கோருதல் - குறித்த தெளிவுரைகள்.

பார்வை:
1. தங்களது கடிதம் ந.க.எண்.10159/93/கே2 நாள் 14.3.94.
2. அரசு கடிதம் எண்.12201/நப2/94-1 ந.நி.ம.கு.வ. நாள்:19.4.94.
3. தங்களது கடிதம் ந.க.எண்.10139/93/கே2 நாள்:15.7.94.

---

பார்வை 3ல் கண்ட தங்களது கடிதத்தில், 19.4.4ம் நாளிட்ட அரசு கடிதம் எண்.12201/நப2/94-1ல் (ந.நி.(ம)கு,வ.து) ஒழுங்கு நடவடிக்கை

விதிகளின்படி தற்காலிக பணிநீக்க காலத்திற்கு பின்னேற்பு வழங்கப்படுவதில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், எனவே இனி தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்ட ஒருவரை 6 மாதத்திற்கு மேல் தற்காலிகப்பணிநீக்கத்தில் வைத்திருக்க அரசு ஆணை எண். 211, பணி மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள்: 27.2.80ல் ஏற்கனவே தெரிவித்துள்ளபடி அரசின் அனுமதி பெற வேண்டிய அவசியம் இல்லையா என்பது குறித்து தெளிவுரை அளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

2. மேற்கண்ட பொருள் தொடர்பாக பின்வரும் தெளிவுரைகளை தங்களுக்குத் தெரிவிக்கப்பணிக்கப்பட்டுள்ளேன்.

அரசுப்பணியாளர் ஒருவரை தற்காலிகப்பணி நீக்கத்தில் வைப்பதால் அவருக்கு இடையூறும் மனஉளைச்சலும் ஏற்படுவதுடன் அரசுக்கும் கூடுதல் செலவினம் ஏற்படுகிறது. தற்காலிகப்பணிநீக்கம் செய்யப்பட்ட அரசுப் பணியாளருக்கு பிழைப்பூதியம் வழங்கப்படுவதுடன், அப்பணியிடத்தில் மேலும் ஒருவரை நியமனம் செய்து அவருக்கு முழு ஊதியம் வழங்க நேரிடுகிறது. ஒழுங்கு நடவடிக்கையின் இறுதியில் தற்காலிகப் பணிநீக்கத்திலுள்ள பணியாளர் குற்றச்சாட்டிலிருந்து முழுமையாக விடுவிக்கப்பட்டால், அவருக்கு முழு ஊதியமும் பிற பணிக்காலப் பயன்களும் வழங்கப்படுகின்றன. ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் அலுவலர்களும், இதனை மறுபரிசீலனை செய்யும் அலுவலர்களும் தற்காலிகப்பணி நீக்கத்திலுள்ள அரசுப் பணியாளர் மீதான ஒழுங்கு நடவடிக்கையை விரைந்து முடிவுக்குக் கொண்டுவர முன்னுரிமை அளிப்பதில்லை. எனவே தான் இவ்வாறு அரசுக்கு ஏற்படக்கூடிய கூடுதல் செலவினத்தை தவிர்க்கவும், ஒழுங்கு நடவடிக்கையை விரைந்து முடிவுக்குக் கொண்டுவரவும், 27.2.80ம் நாளிட்ட பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறையின் அரசாணை (நிலை) எண். 211ல் அரசுப் பணியாளர்களை தற்காலிகப் பணிநீக்க காலத்திற்கு காலக்கெடு நிர்ணயித்து அதை நீட்டிக்க அரசின் முன்அனுமதி பெறவேண்டுமென அறிவுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்நேர்வில் குறிப்பிடப்பட்டுள்ள வருவாய் உதவியாளர் திரு. கே. முருகேசன், ஏற்கனவே 28.8.9 மீண்டும் பணியமர்த்தப்பட்டு விட்டதால் அவருடைய தற்காலிகப்பணி நீக்க காலத்தை மறுபரிசீலனை செய்யவோ ஏற்கனவே செய்யப்பட்ட தற்காலிக பணிநீக்க கால நீட்டிப்புக்கு அனுமதி வழங்கும் கேள்வி எழவோ வாய்ப்பில்லை, முடிந்துபோன தற்கா பணிநீக்க காலத்திற்கு பின்னேற்பு வழங்க, பத்தி 6(2) பகுதி 1 ஒழுங்குமுறை நடவடிக்கையேட்டில் அத்தியாயம் 1ல் அவசியம் எழவில்லை: பத்தி 6(2)ன்படி (பாரா 6(2) Chapter-I Hand Book on Disciplinary Proceedings) தற்காலிகப் பணிநீக்கத்தில் வைக்கப்பட்ட ஒருவர், தற்காலிக பணி நீக்கம் ரத்து செய்யப்படும் வரை தொடர்ந்து பணிநீக்கத்தில் இருப்பதாகவே கருதப்படவேண்டும். ஆயினும், தேவையின்றி ஒருவர் தற்காலிகப் பணி நீக்கத்தில் தொடர்ந்து இருப்பதை தவிர்க்கும் பொருட்டே ஆய்வு செய்யப்பட்டு தொடர்ந்து பணி நீக்கத்தில் இருக்க அரசு மட்டத்தில் அனுமதி வழங்கப்படுகிறது. இனி வருங்காலத்தில் இத்தகைய தவறுகள் (இந்நேர்வில் கண்டுள்ள நபர் 4 ஆண்டுகள் தற்காலிகப்பணிநீக்கத்திலிருந்துள்ளார்) ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்ள மேற்குறிப்பிட்ட அரசாணையில் கூறப்பட்டுள்ள அறிவுரைகளை முறையாக கடைபிடிக்க வேண்டும்.

3. இக்கடிதம் பெற்றுக் கொண்டதற்கு ஒப்புகை அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

/உண்மை நகல்/

கண்காணிப்பாளர் 6/9/95